வணக்கம்
ஆகாஷ்வாணி – புதுச்சேரி
மாநிலச் செய்திகள்
வாசிப்பவர் : மலர்விழி

தேதி : 02-09-2026 – புதன்கிழமை நேரம் : மாலை 6.10 மணி

---

**தலைப்புச் செய்திகள் :**

மாணவர்கள் போதைப் பழக்கத்திற்கு ஆளாவதை தவிர்ப்பதுடன், மற்றவர்கள் போதைப் பழக்கத்திற்கு ஆளாவதையும் தடுக்க வேண்டும் என்று, குடியர துணைத் தலைவர் திரு. சி.பி ராதாகிருஷ்ணன் கூறியுள்ளார்.

மத்திய நிதியமைச்சர் திருமதி. நிர்மலா சீதாராமன் இன்று, அமெரிக்காவின் ஆஷ்வில் நகரில், உலக வங்கித் தலைவர், சர்வதேச செலாவணி நிதியத்தின் மேலாண் இயக்குநர் ஆகியோரை சந்தித்துப் பேசினார்.

நாட்டின் அனைத்து 770 மாவட்டங்களிலும், உள்ளார்ந்த ஏற்றுமதி வாய்ப்புகளை வெளிக் கொணர, மத்திய அரசு, புதிய முன் முயற்சி ஒன்றை அறிவித்துள்ளது.

தமிழகத்தில் மொத்தம் 4 ஆயிரத்து 800 கோடி ரூபாய் மதிப்பிலான, பல்வேறு குடிநீர் மேம்பாட்டுத் திட்டங்களை முதலமைச்சர் திரு. விஜய் அறிவித்துள்ளார்.

**ராதாகிருஷ்ணன் (15)**

மாணவர்கள் போதைப் பழக்கத்திற்கு ஆளாவதை தவிர்ப்பதுடன், மற்றவர்கள் போதைப் பழக்கத்திற்கு ஆளாவதையும் தடுக்க வேண்டும் என்று, குடியர துணைத் தலைவர் திரு. சி.பி ராதாகிருஷ்ணன் கூறியுள்ளார். இன்று ராய்ப்பூர் எய்ம்ஸ் மருத்துவ கல்லூரியின் 3ஆவது பட்டமளிப்பு விழாவில் உரையாற்றிய அவர், மருத்துவ கல்வி முடிப்பவர்கள், நாட்டு மக்களின் ஆரோக்கியம் மற்றும் வாழ்விற்கு சேவை புரியும் பொறுப்பையும், தங்களின் தோளில் ஏற்க வேண்டும் என்றார். சத்தீஸ்கர் மாநிலத்தை நக்சல்வாதம் இல்லாத மாநிலமாக மாற்றுவதற்கான, பிரதமர் திரு. நரேந்திர மோடி, மத்திய உள்துறை அமைச்சர் திரு. அமித் ஷா, சத்தீஸ்கர் முதலமைச்சர் திரு. விஷ்ணுதேவ் சாய் ஆகியோரின் முயற்சிகளை, குடியரசு துணைத் தலைவர் பாராட்டினார். மத்திய சுகாதாரத்துறை இணையமைச்சர் திருமதி. அனுப்பிரியா படேல், சத்தீஸ்கர் ஆளுநர் திரு. ரமேன் டேக்கா உள்ளிட்டோர் பட்டமளிப்பு விழாவில் கலந்து கொண்டனர். விழாவின் போது, படிப்பு முடித்த 689 பேருக்கு பட்டங்களும், பல்வேறு பாடப் பிரிவுகளில் சிறந்து விளங்கிய மாணவர்களுக்கு பதக்கங்களும் வழங்கப்பட்டன.

நிர்மலா (11)

மத்திய நிதியமைச்சர் திருமதி. நிர்மலா சீதாராமன் இன்று, அமெரிக்காவின் ஆஷ்வில் நகரில், ஜி-20 நாடுகளின் நிதியமைச்சர்கள் மற்றும், மத்திய வங்கி ஆளுநர்கள் கூட்டத்தின் நிகழ்வுகளுக்கு இடையே, உலக வங்கித் தலைவர் திரு. அஜய் பங்கா, சர்வதேச செலாவணி நிதியத்தின் மேலாண் இயக்குநர் திருமதி. கிறிஸ்டலினா ஜார்ஜியேவா ஆகியோரை சந்தித்துப் பேசினார். உலக அளவிலான நிதி அமைப்புகளுக்கும், இந்தியாவிற்கும் இடையிலான கூட்டாண்மையை மேலும் வலுப்படுத்துவது குறித்து, இந்தச் சந்திப்புகளின் போது முக்கியமாக விவாதிக்கப் பட்டது. இந்தியாவின் வலுவான பொருளாதார செயல்பாடுகளை IMF மேலாண் இயக்குநர் பாராட்டினார். இந்தியா தற்போதுள்ளதை விட, வேகமாக வளர வாய்ப்புகள் அதிகம் இருப்பதாக, உலக வங்கித் தலைவர் கூறினார்.

ஏற்றுமதி -1 (3)

நாட்டின் அனைத்து 770 மாவட்டங்களிலும், உள்ளார்ந்த ஏற்றுமதி வாய்ப்புகளை வெளிக் கொணர, மத்திய அரசு, **மாவட்டமே ஏற்றுமதி கேந்திரம்** என்ற பெயரில், புதிய முன் முயற்சி ஒன்றை அறிவித்துள்ளது. இது குறித்து கூடுதல் விவரங்கள்...

ஏற்றுமதி -2 (12)

<u>உள்ளூர் உற்பத்தி பொருட்களுக்கு உலக அளவில் சந்தை வாய்ப்புகளைத் தேடித் தருவதன் மூலம், நாட்டின் மொத்த ஏற்றுமதியில், எல்லா மாவட்டங்களும் பங்களிப்பதை உறுதிப்படுத்த, DEH என்னும் புதிய திட்டத்தினால் ஏதுவாகும் என, அரசு வட்டாரங்கள் தெரிவித்துள்ளன. விக்சித் பாரத் இலக்கை நோக்கிய நாட்டின் பயணத்தை, மாவட்டங்களை மையமாகக் கொண்டதாக மாற்றவும், மாவட்டங்களுக்கு இடையே போட்டித் திறனை வலுப்படுத்தவும், இத்திட்டம் உதவிகரமாக இருக்கும். இந்தியாவின் ஒவ்வொரு மாவட்டமும், வேளாண் பொருட்கள், பொறியியல் பொருட்கள், பிரத்யேக பொம்மைகள், மற்றும், புவிசார் குறியீட்டுப் பொருட்களுக்கு புகழ் பெற்றுத் திகழ்வதும், மாவட்ட அளவிலான இப்பொருட்களை, வர்த்தகம், முதலீடு, மற்றும், ஏற்றுமதி வாய்ப்புகளாக மாற்ற, சாத்தியங்கள் அதிகம் இருப்பதும் குறிப்பிடத் தக்கது.</u>

நேபாளம் (14)

வெள்ளத்தால் பாதிக்கப்பட்ட நேபாளத்திற்கான நிவாரண மற்றும் மீட்புப் பொருட்கள் அடங்கிய, இந்தியாவின் 5ஆவது விமானம் இன்று பிற்பகல் நேபாளத்தைச் சென்று அடைந்தது. 11 உறுப்பினர் மீட்புக் குழு ஒன்றையும், சுரங்கப் பகுதிகளில் மீட்புப் பணிகளை மேற்கொள்வதற்கான சிறப்புக்

கருவிகள், மற்றும், ஐந்தரை டன் அத்தியாவசிய மருந்துகளையும், இந்த விமானம் ஏற்றிச் சென்றது. நேபாளத்தில் உள்ள இந்தியத் தூதர், சமூக ஊடகத்தில் இத்தகவலை பகிர்ந்து கொண்டுள்ளார். இதற்கிடையே, நேபாளத்தில் திடீர் வெள்ளத்தால் உயிரிழந்தவர்களின் எண்ணிக்கை ஆயிரத்து 100-ஐ தாண்டி அதிகரித்து இருப்பதாக, நேபாள பேரிடர் மேலாண்மை ஆணையம் தெரிவித்துள்ளது. நீர்மின்சார உற்பத்தி நிலையங்களின் ஊழியர்கள், பாதுகாப்புப் படையினர், வெளிநாட்டினர், மற்றும், உள்ளூர்வாசிகள் உட்பட, சுமார் 4 ஆயிரம் பேரை காணவில்லை என்றும், மீட்புப் பணிகளுக்கு இதுவரை, குறைந்த அளவில் மட்டுமே பலன் கிடைத்து இருப்பதாகவும் தகவல் வெளியாகி உள்ளது.

**சுற்றுச் சூழல் (11)**

இயற்கையுடன் இணைந்த மானுட சகவாழ்வு என்பதே, சுற்றுச் சூழல் பாதுகாப்பு முயற்சிகளுக்கான அடிப்படையாகத் திகழ வேண்டும் என, மத்திய சுற்றுச்சூழல் மற்றும் வனத்துறை அமைச்சர் திரு. பூபேந்திர யாதவ் கூறியுள்ளார். **சுற்றுச் சூழல் பாதுகாப்பு, உயிரி பொருளாதாரம், மற்றும், சுற்றுச் சூழல் சுற்றுலாவை, வாழ்வாதாரம் மற்றும் வருவாய் பெருக்கத்திற்கான தூண்களாக மாற்றுதல்** என்பது குறித்து, இன்று புதுடெல்லியில், 2 நாள் சர்வதேச பயிலரங்கு ஒன்றை, அவர் தொடக்கி வைத்துப் பேசினார். சர்வதேச பெரும் பூனைக் கூட்டணி, ஆசிய வளர்ச்சி வங்கி, மற்றும், தேசிய புலிகள் பாதுகாப்பு ஆணையத்தால் ஏற்பாடு செய்யப்பட்டுள்ள இப்பயிலரங்கில், குறிப்பாக புலிகளின் வாழ்விட பாதுகாப்பு குறித்து, முக்கியமாக விவாதிக்கப்படுகிறது.

**கப்பல் (10)**

**லோகயான் – 26** என்ற பெயரில், உலகைச் சுற்றிப் பெருங்கடல் பயணம் மேற்கொண்டுள்ள, இந்தியாவின் INS சுதர்சினி – பாய்மர பயிற்சிக் கப்பல், இன்று, ஸ்பெயின் நாட்டின் பார்ஸிலோனா துறைமுகத்தை சென்றடைந்துள்ளது. கப்பல் மாலுமிகள் பார்ஸிலோனாவில் தங்கி இருக்கையில், ஸ்பானிய கடற்படை மற்றும் இதர கடல்சார் ஏஜென்சிகளுடன் இணைந்து, பல்வேறு தொழில்முறை மற்றும் கலாச்சார நிகழ்ச்சிகளில் பங்கேற்க உள்ளனர். இந்தியாவின் கடல்சார் பாரம்பரியம் மற்றும், கடல் பயண மரபுகளை, ஸ்பெயின் நாட்டு மக்கள் தெரிந்து கொள்ள ஏதுவாக, வரும் 4ஆம் தேதி, INS சுதர்சினி – பாய்மரக் கப்பலில் பார்வையாளர்கள் அனுமதிக்கப் படுவார்கள் என்றும் அறிவிக்கப் பட்டுள்ளது.

**விஜய்-குடிநீர் -1 (4)**

தமிழகத்தில் மொத்தம் 4 ஆயிரத்து 800 கோடி ரூபாய் மதிப்பிலான, பல்வேறு குடிநீர் மேம்பாட்டுத் திட்டங்களை முதலமைச்சர் திரு. விஜய் அறிவித்துள்ளார். இன்று தமிழக சட்டமன்றத்தில், தாமாகவே முன்வந்து வெளியிட்ட அறிக்கை ஒன்றில், அவர் இத்திட்டங்களை அறிவித்தார். இது குறித்து, கூடுதல் விவரங்கள்…

**விஜய்-குடிநீர் – 2 (11)**

வட சென்னையின் குடிநீர் தேவைகளை சமாளிக்க, மீஞ்சூரில், கடல் நீரை குடிநீராக்கும் ஆலை, தினசரி 400 மில்லியன் லிட்டர் திறன் கொண்டதாக அமைக்கப்படும் என்றும், ஆவடி மாநகராட்சிப் பகுதியில் வீடுகளுக்கு 24 மணி நேரமும் குடிநீர் வழங்க, 500 கோடி ரூபாய் செலவில், திட்டம் அமல்படுத்தப்படும் என்றும் தமிழக முதலமைச்சர் தெரிவித்தார். மதுரை-கடலூர் மாநகராட்சிப் பகுதிகள், 9 நகராட்சிப் பகுதிகள், மற்றும், 20 பேரூராட்சிப் பகுதிகளில், குடிநீர் வசதிகளை மேம்படுத்த , 100 கோடி ரூபாய் ஒதுக்கப் பட்டுள்ளதாகவும், அனைத்து கூட்டு குடிநீர் திட்டங்களையும் புதுப்பிக்க அரசு முடிவு செய்திருப்பதாகவும், அவர் கூறினார். சென்னை கீழ்ப்பாக்கம் குடிநீர் சுத்திகரிப்பு ஆலையின் திறன் கட்டமைப்பை மேம்படுத்த 410 கோடி ரூபாய் ஒதுக்கப் பட்டுள்ளதாக, தமிழக முதலமைச்சர் மேலும் தெரிவித்தார்.

**விஜய் - சான்றிதழ் (9)**

தமிழக முதலமைச்சர் திரு. விஜய், இன்று சட்டமன்றத்தில், தாமாகவே முன்வந்து வெளியிட்ட மற்றொரு அறிக்கையில், கணிப்பொறி சில்லுடன் கூடிய டிஜிட்டல் ஓட்டுநர் உரிமங்கள், தமிழகத்தில், வரும் 15ஆம் தேதி முதல் அறிமுகப் படுத்தப்படும் என அறிவித்தார். QR Code Scanning மூலம், 250 ரூபாய் கட்டணம் செலுத்தி, எங்கிருந்து வேண்டுமானாலும் இதற்குப் பதிவு செய்ய முடியும் என, அவர் கூறினார். வாகனத்தை ஓட்டிக் காட்டும் தேர்வு நடைபெறும் அதே நாளில், ஓட்டுநர் உரிமம் வழங்கப்படும் என்றும், இதனால் காத்திருப்புக் காலம் குறைவதுடன், லைசன்ஸ் வழங்கும் நடைமுறைகளில், வெளிப்படைத் தன்மை மேம்படும் என்றும் அவர் தெரிவித்தார்.

**விஜய் - வழக்கு (9)**

தமிழகத்தில் 2021 முதல் 2026ஆம் ஆண்டு வரை, விவசாயிகள் போராட்டம் மற்றும், ஆசிரியர் போராட்டத்தில் ஈடுபட்ட அனைவர் மீதான எல்லா வழக்குகளும் விலக்கிக் கொள்ளப்படும் என, முதலமைச்சர் திரு. விஜய் அறிவித்துள்ளார். கோரிக்கைகளை வலியுறுத்துவதற்காக ஜனநாயக முறையில் மேற்கொள்ளப்பட்ட அமைதிப் போராட்டங்களே, இவை

என்பதை கருத்தில் கொண்டு, அரசு இவ்வாறு முடிவு செய்திருப்பதாக, அவர் இன்று, தமிழக சட்டமன்றத்தில், தாமாகவே முன்வந்து வெளியிட்ட அறிக்கை ஒன்றில் கூறினார். அனைத்து கட்சிகளும், இந்த அறிவிப்பை வரவேற்றன.

புதுச்சேரி – நாராயணசாமி (12)

கர்நாடகத்தில் உள்ள காங்கிரஸ் அரசு, மேகதாதுவில் அணை கட்ட முயற்சித்தாலும், புதுச்சேரி மக்களின் நலன் கருதி, மத்திய அரசு அதை அனுமதிக்கக் கூடாது என்று, புதுச்சேரி காங்கிரஸ் சார்பில் தாங்கள் வலியுறுத்துவதாக, முன்னாள் முதலமைச்சர் திரு. நாராயணசாமி கூறியுள்ளார். இன்று, புதுச்சேரியில் செய்தியாளர்களிடம் பேசிய அவர், காரைக்கால் பகுதி விவசாயிகள் உரிய அளவில் காவிரி நீர் கிடைக்காமல், ஏற்கனவே பாதிக்கப் பட்டுள்ள நிலையில், மேகதாதுவில் அணை கட்டினால், காரைக்காலுக்கு வரும் காவிரி நீர் மேலும் தடைபடும் என்றார். கேள்வி ஒன்றுக்கு அவர் பதிலளிக்கையில், இண்டியா கூட்டணி கட்சியினர் ஒருமித்த கருத்து அடிப்படையில், பிரதமர் பதவிக்கான வேட்பாளரை தேர்ந்தெடுப்பார்கள் என்றும், திரு. ராகுல்காந்தியை, பிரதமர் பதவிக்கான வேட்பாளராக, தமிழக முதலமைச்சர் திரு. விஜய் ஏற்றுக் கொள்வார் என்றும் கூறினார்.

காரைக்கால் (5)

புதுச்சேரி இந்திரா காந்தி அரசு பொது மருத்துவமனையைச் சேர்ந்த 5 உயர் சிறப்பு மருத்துவ நிபுணர்கள் வரும் 4ஆம் தேதி வெள்ளிக்கிழமை, காரைக்கால் அரசு பொது மருத்துவமனையில், சிறப்பு மருத்துவ சேவைகளை வழங்க உள்ளனர். காரைக்கால் பகுதி மக்கள் இதை நன்கு பயன்படுத்திக் கொள்ள வேண்டும் என, மாவட்ட நிர்வாகம் கேட்டுக் கொண்டுள்ளது.

வானிலை (13)

இன்று, மேற்குத் தொடர்ச்சி மலை மாவட்டங்கள், சென்னை, செங்கல்பட்டு, காஞ்சிபுரம், திருவண்ணாமலை, விழுப்புரம், கடலூர், தஞ்சை, நாகை உள்ளிட்ட மாவட்டங்களின் ஓரிரு இடங்களிலும், புதுச்சேரி-காரைக்கால் பகுதிகளிலும், இடி-மின்னலுடன் கூடிய லேசானது முதல் மிதமான மழை பெய்யக்கூடும் என சென்னை வானிலை ஆய்வு மையம் தெரிவித்துள்ளது. தமிழகத்தின் இதர பகுதிகளில், லேசான மழைக்கு வாய்ப்பு இருப்பதாகவும் வானிலை அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது. வரும் 8ஆம் தேதி வரை, மழை நீடிக்கலாம் என்றும் எதிர்பார்க்கப் படுகிறது. சூறாவளிக் காற்றுக்கு வாய்ப்பு அதிகம் உள்ள, தமிழக கடலோரப் பகுதிகள், வங்கக் கடல் பகுதிகள், மற்றும், அரபிக் கடல் பகுதிகளுக்கு மீனவர்கள் செல்ல வேண்டாம் என அறிவுறுத்தப் பட்டுள்ளனர். இதற்கிடையே கடந்த 24 மணி நேரத்தில், புதுக்கோட்டை மாவட்டம் இலுப்பூரில், 4 செ.மீ மழை பதிவாகி உள்ளது.

**பேட்மிண்டன் (8)**

சீனாவின், **ஷென்ஜென்** நகரில் நடைபெறும், சீன ஓபன் பேட்மிண்டன் சாம்பியன் பட்டப் போட்டிகளின், ஆடவர் ஒற்றையர் பிரிவில், இந்திய வீரர் கிடாம்பி ஸ்ரீகாந்த், **சீன தாய்பே** வீரரைத் தோற்கடித்து, 2ஆவது சுற்றுக்கு முன்னேறி உள்ளார். மகளிர் ஒற்றையர் பிரிவில், இந்தியாவின் **தான்வி ஷர்மா**, டென்மார்க் வீராங்கனைக்கு எதிராக வெற்றி பெற்று, 2ஆவது சுற்றுக்குத் தகுதிப் பெற்றுள்ளார். கலப்பு இரட்டையர் பிரிவில், இந்தியாவின் **துருவ் கபிலா – தனிஷா கிறாஸ்டோ** இணை, தாய்லாந்து இணையைத் தோற்கடித்து, அடுத்த சுற்றுக்கு முன்னேறி உள்ளது.

**தமிழ்நாடு கோயில் (5)**

தமிழகத்தில், தொன்மையான கோயில்களை புனரமைத்து, அவற்றின் பழம் பெருமையை மீட்க, அரசு திட்டமிட்டுள்ளதாக, மாநில இந்து-அறநிலையத் துறை அமைச்சர் திரு. எஸ். ரமேஷ் தெரிவித்துள்ளார். இப்பணிகள் கட்டம் – கட்டமான முறையில் மேற்கொள்ளப் படும் என, அவர் இன்று, தமிழக சட்டமன்றத்தில், கேள்வி ஒன்றுக்கு பதிலளிக்கையில் கூறினார்.

**மீண்டும் தலைப்புச் செய்திகள் :**

மாணவர்கள் போதைப் பழக்கத்திற்கு ஆளாவதை தவிர்ப்பதுடன், மற்றவர்கள் போதைப் பழக்கத்திற்கு ஆளாவதையும் தடுக்க வேண்டும் என்று, குடியர துணைத் தலைவர் திரு. சி.பி ராதாகிருஷ்ணன் கூறியுள்ளார்.

மத்திய நிதியமைச்சர் திருமதி. நிர்மலா சீதாராமன் இன்று, அமெரிக்காவின் ஆஷ்வில் நகரில், உலக வங்கித் தலைவர், சர்வதேச செலாவணி நிதியத்தின் மேலாண் இயக்குநர் ஆகியோரை சந்தித்துப் பேசினார்.

நாட்டின் அனைத்து 770 மாவட்டங்களிலும், உள்ளார்ந்த ஏற்றுமதி வாய்ப்புகளை வெளிக் கொணர, மத்திய அரசு, புதிய முன் முயற்சி ஒன்றை அறிவித்துள்ளது.

தமிழகத்தில் மொத்தம் 4 ஆயிரத்து 800 கோடி ரூபாய் மதிப்பிலான, பல்வேறு குடிநீர் மேம்பாட்டுத் திட்டங்களை முதலமைச்சர் திரு. விஜய் அறிவித்துள்ளார்.